




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 268 | 4 Pages | 26.4.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 268 | 4 பக்கங்கள் | 26.4.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்**
**றேதம் பலவுந் தரும்**

**விளக்கம்:**
பற்றுக்களைத் துறந்தோம் என்று சொல்கின்றவரின் பொய்யொழுக்கம் என்ன செய்தோம் என்ன செய்தோம் என்று வருந்தும் படியான துன்பம் பலவும் தரும்.

## காஷ்மீரில் துப்பாக்கி சண்டை; ராணுவ வீரர் வீர மரணம்




ஜம்மு, ஏப்.26

காஷ்மீரின் உத்தம்பூர் மாவட்டம் வசந்த்கார் பகுதியில்பயங்கரவாதிகள்பதுங்கி இருப்பதாக உளவுத்துறை ரகசிய தகவல் கொடுத்தது. அதன்பேரில், காஷ்மீர் போலீசாரும், ராணுவத்தின் சிறப்பு படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். அவர்கள் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். பயங்கரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தை கண்டறிந்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தினர். அவர்களை சரண் அடையுமாறு உத்தரவிட்டனர். அதை ஏற்காமல், பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். எனவே, பாதுகாப்பு படையினரும் எதிர் தாக்குதலில் ஈடுபட்டனர். இருதரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடந்தது.

அதில், ராணுவத்தின் சிறப்பு படையை சேர்ந்த ஒரு வீரர், துப்பாக்கி குண்டு பாய்ந்து காயம் அடைந்தார். அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்தும் பலனின்றி வீர மரணம் அடைந்தார். அவர் பெயர் ஜான்டு அலி ஷேக். ''ஜான்டு அலி ஷேக்கின் தைரியமும், அவரது குழுவின் வீரமும் மறக்க முடியாது. இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்பத்துக்கு ராணுவம் துணைநிற்கும்'' என்று ராணுவம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. துப்பாக்கி சண்டை தொடர்ந்து நடந்தது. சண்டைக்கு பிறகு, சந்தேகத்தின்பேரில் 4 பேர் விசாரணைக்காக பிடித்துச் செல்லப்பட்டனர்.

கடந்த 24 மணி நேரத்தில், ஜம்முவில் நடந்த 3வது துப்பாக்கி சண்டை இதுவாகும். நேற்று முன்தினம் குல்கம் மாவட்டம் தங்மார்க் பகுதியில் துப்பாக்கி சண்டை நடந்தது. பாரமுல்லா மாவட்டம் உரி நலா பகுதியில் காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற 2 பயங்கரவாதிகள், துப்பாக்கி சண்டைக்கு பிறகு கொல்லப்பட்டனர்.மேலும், உத்தம்பூர் மாவட்டத்தின் வசந்த்கார் பகுதில் கடந்த ஓராண்டில் அடுத்தடுத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன.

## பஹல்காம் தாக்குதலை யார் செய்தாலும் தவறுதான் பாகிஸ்தான் மக்கள் கருத்து



புதுடெல்லி, ஏப்.26

இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களை உடனடியாக வெளியேறும்படி இந்தியா அறிவித்துள்ளதால், சார்க் விசா திட்டத்தின் கீழ் இந்தியா வந்த பாகிஸ்தானியர்கள் பலர் தங்கள் நாட்டுக்கு திரும்புவதற்காக நேற்று வாகா எல்லையில் குவிந்தனர்.

அவர்களில் ஒருவரான அகமது என்பவர் கூறும்போது, "நாங்கள் இங்குள்ள எங்கள் உறவினர்களை பார்க்க கடந்த 15ந்தேதி வந்தோம். 45 நாட்கள் விசாவில் எங்களை அனுமதித்து இருந்தனர். பஹல்காம் தாக்குதலை யார் செய்து இருந்தாலும் தவறானதாகும். நாங்கள் இந்தியாவுடன் சகோதரத்துவத்தையும், நட்புறவையும் விரும்புகிறோம். இங்கு வெறுப்புக்கு இடமில்லை. அதை நாங்கள் விரும்பவுமில்லை" என்றார். மற்றொரு பாகிஸ்தானியரான முஸ்தபா கூறுகையில், பஹல்காம் தாக்குதல் ஒருபோதும் நடந்திருக்கக்கூடாது என்றாலும், அனைத்து பாகிஸ்தானியர்களையும் இந்தியாவை விட்டு வெளியேறச் சொல்வது சரியான முடிவு அல்ல." என்றார்.

## பஹல்காம் தாக்குதல்: பாகிஸ்தானுக்கு ஆதரவாக பேசிய அசாம் எம்.எல்.ஏ. கைது



கவுகாத்தி, ஏப்.26

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு எதிராக வாகா எல்லை மூடல், சிந்து நதி நீர்ஒப்பந்தம்ரத்துஉள்ளிட்டநடவடிக்கைகளைமத்தியஅரசுஅறிவித்து உள்ளது. இந்த நிலையில் அசாமின் எதிர்க்கட்சியான அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ. அமினுல் இஸ்லாம், பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்து பேசி உள்ளார்.

அதுகுறித்து அந்த கட்சி தலைவர் பத்ருதீன் அஜ்மல் கூறும்போது, "எம்.எல்.ஏ.வின் கருத்துக்கும் கட்சிக்கும் தொடர்பு இல்லை. இது அரசுடன் நிற்க வேண்டிய நேரம். பயங்கரவாதத்துக்கும் மதத்துக்கும் தொடர்பில்லை. அந்த பயங்கரவாதிகள் இஸ்லாம் மதத்திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்திவிட்டார்கள்" என்று கூறி உள்ளார்.

இதையடுத்து அமினுல் இஸ்லாம் எம்.எல்.ஏ.வை தேசத் துரோக குற்றச்சாட்டில் போலீசார் நேற்று கைது செய்தனர். 'நாங்கள் அவர் பேசும்வீடியோவைபார்த்தோம்.தாக்குதலில்பாகிஸ்தான்உடந்தையை மறைத்து பாதுகாக்கும் வகையில் பேசியிருந்தார். நானே அதுகுறித்து நடவடிக்கை எடுக்க போலீசாரை கேட்டுக் கொண்டேன். அவர் கைது செய்யப்பட்டதாக டி.ஜி.பி. என்னிடம் கூறினார். பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஆதரித்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ யார் பேசினாலும் எனது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும்" என்று மாநில முதல்மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா கூறினார்.

# சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம்: பிரத்யேக இணையதளத்தை தொடங்கி வைத்தார் முதல்அமைச்சர்

சென்னை, ஏப்.26

2021ம் ஆண்டு சட்டமன்றப் பேரவையின் நூறாண்டு நிறைவினையொட்டி, தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவுரையின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சரால் 1382021 அன்று தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், 1921ம் ஆண்டு முதல் நடைபெற்ற சட்டமன்றப் பேரவை மற்றும்சட்டமேலவைநிகழ்வுகளின் பதிவுகள் கணினிமயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சட்டமன்ற ஆவணங்கள்முறையேசட்டமன்றப் பேரவைமற்றும்சட்டமேலவையின் நடவடிக்கை குறிப்புப் புத்தகங்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள், வெளியீடுகள், புகைப்படங்கள், செய்தித் துணுக்குகள், காணொலி துணுக்குகள் உள்ளிட்ட



அனைத்தையும் நவீன முறையில் கணினிமயமாக்கம் (Digitization) செய்யும் பணியானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மேற்பார்வையின்கீழ் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் நடைபெற்று வருகின்றது.

தற்போது முதற்கட்டமாக, 1952ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென வடிவமைக்கப்பட்ட பிரத்யேக 'tnlas digital.tn.gov.in' என்ற இணையதளத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த இணையதளத்தினை தமிழ்நாடு முதல்அமைச்சர் இன்றையதினம் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன், தகவல்தொழில்நுட்பவியல்மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்பழனிவேல்தியாகராஜன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சான்றிதழ் வழங்கும் விழா - புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு ஜே.எம்.ஜே மீடியா Pvt (Ltd)நடாத்தி பெரும் வரவேற்பைப் பெற்ற உலகளாவிய கிராஆத் போட்டி

சான்றிதழ் வழங்கும் விழா – புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு ஜே.எம்.ஜே மீடியா Pvt (Ltd)நடாத்தி பெரும் வரவேற்பைப் பெற்ற உலகளாவிய கிராஆத் போட்டி

இந்தமேடையைஒருஅறிமுகமாகக் கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய அனைத்து போட்டியாளர்களுக்கும் இன்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பாராட்டு வழங்கப்பட்ட நிகழ்வாக இது அமைந்தது. போட்டியில் பங்கேற்ற ஒவ்வொருவரும் ஒரு அரிய அனுபவத்தை பகிர்ந்தனர். இது அவர்களின்திறமையையும்,கடமையுணர்வையும் மேலும் மேம்படுத்தும் ஒரு பொன்னான வாய்ப்பாக அமைந்தது.

புனிதரமழான்மாதத்தைமுன்னிட்டு ஜே.எம்.ஜே.மீடியாpvt(Ltd)நிறுவனம் நடாத்தி வந்த உலகளாவிய கிராஆத் போட்டி ஆன்மீகத் தாக்கம் நிறைந்த நிகழ்வாகும். ஒவ்வொரு ஆண்டும், குர்ஆனின் சிறப்பை மக்கள் மத்தியில் பரப்பும் நோக்கத்தில், இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் தலைவி ஜஸூரா ஜலீலின் தலைமையில் நடாத்தப்படும் இந்த போட்டி இஸ்லாமியசமூகம் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகிறது.

இந்த ஆண்டின் கிராஆத் போட்டி வழக்கத்தை விட அதிகமான பங்கேற்பாளர்களுடன் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தங்களது




மண்ணில் போட்டிகளை திறமையாக நடாத்தியதுடன் ஏராளமான குழந்தைகள், இளையோர் மற்றும் பெரியவர்களையும் ஈர்க்க முடிந்தது.

போட்டியில் பங்கேற்ற அனைத்து போட்டியாளர்களும் தங்கள்மனதைக் கவரும் இனிமையான குரலிலும் இராகத்துடனும்குர்ஆனைஓதியதன் மூலம் அனைவரையும் பரவசப்படுத்தினர். குர்ஆன் ஓதும் அந்த தருணங்கள் நிகழ்வில் இருந்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நன்கு பதிந்துவிட்டன.

"கிராஆத் போட்டி எனும் இந்த மேடை, நாங்கள் குர்ஆனை ஓதும் அனுபவத்தை பகிரும் ஒரு புனித வாய்ப்பாக இருந்தது," என பங்கேற்றவர்கள் மிகுந்த உணர்வோடு தெரிவித்தனர்.

இந்த முயற்சியின் முழுமையான ஒழுங்கமைப்பையும் வழிநடாத்தலையும் நிறுவனத்தின் பணிப்பாளரும் தலைவியுமான ஜஸூரா ஜலீல் அவர்கள் மகத்தான முறையில் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே. எம். ஜே மீடியாவின் செய்தியாளர் டி. மை. சாகிதா பானு



கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் பேரில் மது விலக்கு அமலாக்கப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுரையின் பேரில் போதை பொருள் தடுப்பு மற்றும் மது விலக்கு அமலாக்கப்பிரிவு சிறப்புஉதவி ஆய்வாளர் திரு ஜேம்ஸ் மற்றும் காவலர்கள் செட்டி பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மலுமிச்சம்பட்டி GM பேக்கரி முன்பு பெட்டி கடையில் தடை செய்யப்பட்ட 5kg குட்கா விற்பனை செய்ய வைத்திருந்ததை கண்டுபிடித்து பறிமுதல் செய்யப்பட்டது




திருவான்மியூர் காவல் நிலைய இரட்டை கொலை வழக்கில், சிறப்பான முறையில் புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, 17வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் எதிரிக்கு இரட்டை ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/ அபராதம் என கடுமையான தண்டனை பெற்றுத் தந்த காவல் ஆய்வாளர் E.ராமசுந்தரம், கோட்டூர்புரம் காவல் நிலைய ஆய்வாளர் (அப்போதைய திருவான்மியூர் காவல் ஆய்வாளர்) அவர்களை சென்னை பெருநகரகாவல்ஆணையாளர்நேரில்அழைத்துபாராட்டிவெகுமதிவழங்கினார்.


## ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளையும், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் மேலகுத்தப்பாஞ்சான் ஊராட்சியில் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும். வருகைப்பதிவேடு குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும். ஆலங்குளம் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என உரிய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிய பட்டு வஸ்திரம் அனுப்பிவைப்பு



ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.26

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயில் கோயில் சித்திரை திருவிழாவில் இன்று (ஏப்ரல் 26) தேரோட்டம் நடைபெற உள்ளநிலையில் நம்பெருமாளுக்கு சாற்றுவதற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிய பட்டு வஸ்திரம், கிளி உள்ளிட்ட மங்களப் பொருட்கள் ரீரங்கம் அனுப்பி வைக்கப்பட்டது. 108 வைணவ திவ்ய தேசங்களில் பிரசித்தி பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் மகளாக அவதரித்த ஆண்டாள் தன்னை பெருமாளின் மனைவியாக நினைத்து மூலவர் பெரிய பெருமாளுக்கு தொடுத்த பூ மாலையை சூடிக் கொண்டார். ஆண்டாள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்து ஸ்ரீரங்கம் ரெங்கநாதரை மணம் புரிந்தார். ஆண்டாள் 108 திவ்ய தேச பெருமாள்களை மாலையாக சூடி இருப்பதாக ஐதீகம். அதைக் குறிக்கும் வகையில் ஆண்டாள் சந்நிதி உட்பிரகாரத்தில் 108 திவ்ய தேச பெருமாளும் ஓவியமாக வரையப்பட்டு உள்ளது. திருப்பதி பிரம்மோற்சவத்தில் கருட சேவையின் போது மலையப்ப சுவாமி, மதுரை சித்திரை திருவிழாவில் வைகை ஆற்றில் இறங்கும்போது கள்ளழகர், ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயில் சித்திரை தேரோட்டத்தில் நம்பெருமாள் ஆகியோர் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை, பட்டு வஸ்திரம் அணிந்து எழுந்தருள்கின்றனர். அதன்படி ஸ்ரீரங்கம் சித்திரை திருவிழாவில் இன்று (ஏப்ரல் 26) தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிக்கொடுத்த பட்டு வஸ்திரம், கிளி உள்ளிட்ட மங்கள பொருட்கள் நேற்று ரீரங்கம் அனுப்பி வைக்கப்பட்டது. முன்னதாக ஆண்டாளுக்கு கிளி, பட்டு வஸ்திரம் சாற்றப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதனைதொடர்ந்து கிளி, பட்டு வஸ்திரம் ஆகியவை மாட வீதிகள் வழியாக மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் கோயில் செயல் அலுவலர் சர்க்கரையம்மாள், சுதர்சன் பட்டர், ரமேஷ் பட்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# "வெளியே வருவோம்... நீதிபதியை கொல்லுவோம்" - நீதிமன்றத்திலேயே பகிரங்க கொலை மிரட்டல் விடுத்த ரவுடிகள்... மதுரையில் 22 வருட பகையின் தொடர்ச்சி



மதுரை மாநகர் கீரைத்துறை காவல்துறையினருக்கு வில்லாபுரம் கிழக்குதெருமுனியாண்டி கோவில் அருகில் உள்ள கருவேலங்காட்டுக்குள் கஞ்சாகடத்தப்படுவதாக கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் தேதியன்று ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக்கு சென்ற கீரைத்துறை காவல்துறையினர் அங்கு மரத்திற்கு கீழ் வெள்ளைசாக்குடன்நின்றிருந்த மதுரை புதுஜெயில் ரோடு முரட்டம்பத்திரி பகுதியை சேர்ந்த சகோதரர்களான பாண்டியராஜன் மற்றும் அவரது சகோதரர் பிரசாந்த் மற்றும் பாண்டியராஜனின் மனைவி சரண்யா ஆகிய 3 பேரை பிடித்து விசாரித்தபோது 25 கிலோ உலர் கஞ்சா இலைகளை பதுக்கி வைத்திருப்பதை கண்டுள்ளனர்.

பின்னர் மூவரையும் பிடித்து விசாரித்தபோது மதுரைகாமராஜபுரம் பகுதியை சேர்ந்த பிரபல ரௌடியான வெள்ளைக்காளியின் அண்ணன் சின்னமுனுசு மகன் சண்முகவேலு இரவு நேரத்தில் வந்து 25 கிலோ கஞ்சாவை வைத்திருக்குமாறு கொடுத்ததாக தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்த கஞ்சாவை ஆந்திராவில் இருந்து வாங்கி வந்ததாகவும், அதன்பிறகு திருச்சியில் கஞ்சாவழக்கில் சண்முகவேல் சிறைக்கு சென்றுவிட்டார் எனகூறியுள்ளனர்.

இதையடுத்து பாண்டியராஜன் மற்றும் அவரது சகோதரர் பிரசாந்த் மற்றும் பாண்டியராஜனின் மனைவி சரண்யா ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கானது மதுரை மாவட்ட போதைப்பொருள் தடுப்பு முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுவந்த நிலையில் (ஏப்.24) வழக்கின் இறுதிகட்ட விசாரணை நீதிபதி ஹரிஹரகுமார் முன்பாக விசாரணைக்கு வந்த போது மூவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்ட நிலையில் பாண்டியராஜன் மற்றும் அவரது சகோதரர் பிரசாந்த் மற்றும் பாண்டியராஜனின் மனைவி சரண்யா ஆகிய மூவருக்கும் தலா 12 ஆண்டுகள் சிறை தண்டனையும், 1 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

இதனையடுத்து சிறையில் அடைப்பதற்காக காவல்துறையினர் அழைத்துசெல்ல தயாரானர்.

நீதிமன்றத்தின் உத்தரவை கேட்ட குற்றவாளிகளான பாண்டியராஜன் மற்றும் அவரது சகோதரர் பிரசாந்த் ஆகிய இருவரும் திடிரெனநீதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்ததோடு நிதீமன்றத்தின் கண்ணாடிகளை கையால் உடைத்து அராஜகத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் கைகளில் ரத்தம் சொட்ட சொட்ட கிளாமர் காளி கொலை வழக்கில் எதற்கு சுபாஸ் சந்திரபோசை என்கவுண்டர் செய்தீர்கள் என மிரட்டியதோடு நான் வெள்ளைக்காளி பசங்க தான் என கூறிக்கொண்டே மிரட்டல் விடுத்ததோடு, நாங்கள் ஜெயிலில் இருந்து வெளியில் வந்து நீதிபதியை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தனர்.

அப்போது காவல்துறையினர் இறுக பிடித்த போதும் துள்ளிகுதித்து தப்பியோட முயன்ற போது காவல்துறையினர் தடுத்ததால் காவல்துறையினரையும், வழக்கறிஞர்களையும் ஆபாசமாக பேசியதோடு தொடர்ந்து மிரட்டியபடி சென்றனர்.

அதனை பார்த்த காவல்துறையினரே மிரண்டுபோய் செய்வதறியாது திகைத்து நின்றனர். பின்னர் இருவரையும் பாதுகாவலுக்கு வந்த காவல்துறையினர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

பின்னர் பாதுகாப்பிற்கு அழைத்து வந்த காவல்துறையினர் அளித்த புகாரின் கீழ் இருவரையும் அண்ணாநகர் காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரையில் குருசாமி மற்றும் வெள்ளைகாளி தரப்பு மோதலில் தொடர்ந்து 22 கொலை சம்பவங்கள் நடைபெற்று குருசாமி தரப்பான கிளாமர் காளி கொலை வழக்கில் வெள்ளைக்காளியின் ஆதரவாளரான சுபாஸ்சந்திரபோசை காவல்துறையினர் என்கவுண்டர் செய்த நிலையில் வெள்ளைக்காளியில் ஆதரவாளர்கள் நீதிமன்றத்திலயே எவ்வித அச்சமுமின்றி நீதிபதிக்கே கொலை மிரட்டல் விடுத்ததோடு, காவல்துறை, வழக்கறிஞர்களுக்கும் கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நீதிபதிக்கே பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கும் வகையில் மிரட்டல் விடுத்த இது போன்ற குற்றவாளிகள் மீது காவல்துறையினர் இரும்புகரம் கொண்டு கடும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# தென்காசி மாவட்ட நியாய விலை கடை உழியர்கள் ஆர்ப்பாட்டம்




தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலையத்தின் முன்பு தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் 30 அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி ஆர்ப்பட்டம் நடத்தினர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் முருகன்தலைமையிலும் மாவட்ட துணைத் தலைவர் காளிராஜ் பாண்டியன் முன்னிலையிலும் நடைப்பெற்றது தென்மண்டல அமைப்பு செயலாளர் இளங்கோ மாவட்ட செயலாளர் படியேறும் பெருமாள் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துறை வழங்கினார்கள்

திருநெல்வேலி மாவட்ட தலைவர் செல்லத்துரை பாண்டியன் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் ரவிக்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்கள்

தென்காசியில் தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் பொது விநியோகத் திட்டத்திற்கென தனித்துறை உருவாக்கப்பட வேண்டும், அத்தியாவசிய பொருட்களை ஆண்டுக்கு ஒரு முறை பொதுமக்களிடம்கருத்து கேட்டு அதன் அடிப்படையில் அத்தியாவசிய பொருட்கள் வழங்க வேண்டும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் உள்ள எடை தராசும் அலுவலக கணினியும் இணைத்து அதன் அடிப்படையில் எடை அளவை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அதுவரை நியாய விலை கடைகளில் உள்ள எடை தராசையும் விற்பனை முனையத்தையும் இணைப்பதை கைவிட வேண்டும் நியாய விலை கடைகளுக்கு வழங்கப்படும்

அத்தியாவசியபொருட்கள் நியாய விலைக் கடைகளில் இறக்கிய பின்பு விற்பனையாளர் கையொப்பமிட்ட ரசீதின் அடிப்படையில் விற்பனை முனையத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும், அரிசி உள்ளிட்ட அனைத்து பொருட்களும் தரமான முறையில்சரியானநிலையில் பொட்டலமாக வழங்கப்பட வேண்டும் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும்

100 % ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் வேறு மாநில வெளிமாவட்ட வெளியூர் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்க ஏதுவாக கூடுதலாக 10 % அத்தியாவசிய பொருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மூன்று நாள் கடையடைப்பு போராட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாவட்டத்தின் தலைவர் ரெங்கராஜ் நன்றி கூறினார்.

# வேடசந்தூர் கஞ்சா வைத்திருந்தவர் கைது




வேடசந்தூர் அருகே கோட்டையூர் பகுதியில் சந்தேகப்படும்படி நின்ற ஒருவரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், வேடசந்தூரரை சேர்ந்த கண்ணன் (40) என்றும், அவர்வை த்திருந்த சாக்கு பையில் 1 கிலோ 950 கிராம் கஞ்சா இருப்பதும் தெரியவந்தது. அதனை போலீசார் பறிமுதல் செய்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவுசெய்து அவரை கைது செய்தனர்.

# சாணார்பட்டியில் போக்சோ வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை



சாணார்பட்டி: போக்சோ வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை சாணார்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த 11 வயது சிறுமியை கடந்த 2024ம் ஆண்டு பாலியல் வன்கொடுமை செய்த சிறுமலைபுதூர் பகுதியை சேர்ந்த தாமஸ் பெர்னாண்டோ(28) என்பவர் கைதாகினார். திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இன்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 6 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.1,12,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# தூத்துக்குடியில் திமுக மாணவரணி உறுப்பினர் சேர்க்கை பிஜேபி அதிமுக மக்களுக்கு எதிரான துண்டு பிரசுரம் விநியோகம்



தூத்துக்குடியில் திமுக மாணவரணி உறுப்பினர் சோ்க்கை பிஜேபி அதிமுக மக்களுக்கு எதிரான துண்டு பிரசுரம் விநியோகம் நடைபெற்றது.

தூத்துக்குடி திமுக தலைவரும் முதலமைச்சருமான முக ஸ்டாலின் ஆணைப்படி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உாிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் வழிகாட்டுதலின்படி மாநில மாணவர் அணி அமைப்பாளர் ராஜிவ்காந்தி ஆணைக்கினங்க இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சத்யா தலைமையில் இந்திராநகர், திருவீகநகர், சுந்தரவேல்புரம், முத்தையாபுரம் போன்ற பகுதியில் நடைபெற்றது. அதிமுக பாஜக கூட்டணியில் தமிழக மக்கள் நலனுக்கு எதிரான திட்டங்களையும் அதற்கு துணை போன அதிமுக துரோக செயல்களையும் வெளிப்படுத்தும் துண்டு பிரசுரமும் பொதுமக்களுக்கும் வியாபாாிகளுக்கும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில்முத்தையாபுரம்பகுதிதிமுகசெயலாளர் மேகநாதன், பகுதி நிர்வாகிகள் தீபக் ராஜேஷ் சுபாஷ் வேளாங்கண்ணி, சரவணகுமார், ஸ்டீபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

# காஞ்சிபுரத்தில் முன்னாள் அமைச்சர் வி.சோமசுந்தரம் தலைமையில் விடியா திமுக ஆட்சிக்கு எதிராக திண்ணை பிரச்சாரம்



காஞ்சிபுரம், ஏப்.26

காஞ்சிபுரம் மாவட்டம் அதிமுக சார்பில் மாவட்ட அம்மா பேரவை சார்பில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே யு எஸ் சோமசுந்தரம் ஏற்பாட்டில் காஞ்சிபுரம் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் வி.சோமசுந்தரம் தலைமையில் கட்சி படையினர் படை சூழ காந்தி ரோடு பகுதி, ராஜாஜி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் விடியா திமுக்கு அரசுக்கு எதிராக 11வது வார திண்ணை பிரச்சாரம் கடைக்கடையாக சென்று துண்டு பிரச்சனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் ஆர்.டி.சேகர் , மாவட்ட கழக பொருளாளர் வழக்கறிஞர் வள்ளிநாயகம் , மாநில கைத்தறி பிரிவு துணை செயலாளர் யுவராஜ் , மாநகர பகுதி செயலாளர் பாலாஜி , மாவட்ட மாணவரணி செயலாளர் திலக்குமார் , ஒன்றிய செயலாளர் தும்பவனம் ஜீவானந்தம் , பகுதி கழக செயலாளர் கோல்ட் ரவி , ஜெயராஜ் , மாவட்ட கைத்தறி பிரிவு செயலாளர் வில்வபதி , மாவட்ட கைத்தறி பிரிவு இணைச் செயலாளர் கோபால் ,

ஒன்றிய மாணவரணி செயலாளர் வெற்றி பாண்டியன் , இலக்கிய அணி மாவட்ட செயலாளர் பொன் முருகேசன் , மாவட்ட பாசறை துணை செயலாளர் சந்திரசேகர், நகர செயலாளர் ஜனாதட்சின் , நகர கைத்தறி பிரிவு செயலாளர் வாசு , வட்ட செயலாளர்கள் மோதிலால், ராதாகிருஷ்ணன் , பாசறை ஜி.பெருமாள் , அம்மா பாலு பூக்கடை ராமு , வட்ட பிரதிநிதி பாபு மற்றும் மகளிர் அணியினர் நிலாவதி , திலகா , அஜ்மா , சித்ராகலா சதீஷ் ,மாதவி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

# காவிரி டெல்டாவில் ஆறு மற்றும் வாய்க்கால்களில் தூர்வாரும் பணியை உடனே தொடங்க வேண்டும்: ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை



தஞ்சாவூர்,ஏப். 26

தஞ்சை பெசன்ட் அரங்கில் தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சங்கத்தின் மாநில தலைவர் பூ. விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.

லால்குடி ஒன்றிய தலைவர் குணசீலன் வரவேற்றார். மாவட்டத் தலைவர் லோகநாதன் தஞ்சை ஒன்றிய அமைப்பாளர் முருகேசன் லால்குடி ஒன்றிய செயலாளர் தங்கராஜ் லால்குடி நகரத் தலைவர் மில்டன் ஜி நகர செயலாளர் வரதராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

குறுவை சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பு காவிரி டெல்டாவில் உள்ள ஏரிகள் காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் ஆகியவற்றின் மெயின் வாய்க்கால்கள் மற்றும் கிளை பாசன வாய்க்கால்களை காலதாமதப்படுத்தாமல் உடனடியாக தூர்வாரி புனரமைக்க வேண்டும். கோடை சாகுபடியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்காக பகலில் 12 மணி நேரமும் இரவில் 12 மணி நேரமும் இலவச மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் வழங்க வேண்டும் 12 ஆண்டுகளாக இலவச விவசாய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு தமிழக அரசு உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்க வேண்டும். மத்திய அரசு புதிய மின்சார திருத்த சட்டத்தை வாபஸ் பெற வேண்டும். நெல் சாகுபடி விவசாயிகளுக்கு கூட்டுறவு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் விவசாயிகளை அலையவிடாமல் உடனடியாக பயிர் கடன் வழங்க வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு மூன்று சதவீத வட்டி மானியத்தில் நகை கடன் வழங்க வேண்டும். கூட்டுறவு தொடக்க வேளாண் கடன் சங்கங்களில் கால்நடை பராமரிப்பு செய்ய விவசாயிகளுக்கு வட்டி இல்லா கடன் வழங்க வேண்டும் போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் திருவையாறு ஒன்றிய அமைப்பாளர் பெரும்புலியூர் வெங்கடேஸ்வரன் நன்றி கூறினார்.

# மதுரை மாநகர காவல் ஆணையர் தலைமையில் 500 காவலர்களுக்கு தலைக்கவசம் வழங்கும் விழா




மதுரை மாவட்ட மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில ஊர்க்காவல் படையினர் போக்குவரத்து காவல்துறையினர் உட்பட 500காவலர்களுக்கு மதுரை தெப்பக்குளம் அருகே உள்ளதனியார்மண்டபத்தில் தலைக்கவசம் வழங்கப்பட்டது.

எலிக்ஸிர் பவுண்டேஷன் மற்றும் டூ ஹோம் பைனான்ஸ் சார்பில் தமிழகம் முழுவதும் ஐஎஸ்ஐ முத்திரை பதித்த 12,000 ஹெல்மெட்டுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி மதுரையில் 3000 ஹெல்மெட் வழங்கப்படுகிறது இதன் முதல் நிகழ்வாக 500 ஹெல்மெட் காவலர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மதுரை மாநகர காவல் துணை ஆணையர் போக்குவரத்து வனிதா, மதுரை மாநகர கூடுதல் காவல்துறை ஆணையர் போக்குவரத்து திருமலை குமார், ஆகியோர் தலைமையில் ட்ரூம் பைனான்ஸ் சார்பில் ஸ்டேட் ஹெட் ராகவன், எலிக்சர் பவுண்டேஷன் சார்பில் கார்த்திக், முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இரும்பேட்டில் கொடி கம்பத்தை அகற்றிய நெடுஞ்சாலைத்துறையை கண்டித்து மாற்றுத் திறனாளிகள் உள்ளிருப்பு போராட்டம்



ஆரணி அடுத்த இரும்பேடு கிராமத்தில் மாற்றுத்திறனாளிகள் சங்க கொடியை அகற்றிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளை கண்டித்து நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் பெயரில் தமிழக முழுவதும் நெடுஞ்சாலை பகுதியில் உள்ள கட்சி கொடி கம்பங்கள் பெயர் பலகைகள் அகற்ற நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தது.அதன் அடிப்படையில் நெடுஞ்சாலை ஓரம் உள்ள கட்சி கொடி கம்பங்கள் பெயர் பலகைகள் உள்ளிட்டவை அகற்றும்பணியில்அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் இரும்பேடு கிராமத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான நலச் சங்கத்தின் பெயர் பலகை மற்றும் கொடி கம்பங்களை நெடுஞ்சாலை துறையினர் அகற்றினர். இதனால் ஆத்திரமடைந்த மாற்றுத்திறனாளிகள் பையூர் கிராமத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்தில் தரையில் அமர்ந்து உள்ளிருப்புதர்ணாபோராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து வந்த ஆரணி கிராமிய போலீசார் அவர்களிடம் சமாதானம் செய்த போது போராட்டக்காரர்கள் தங்களின் கொடிக்கம்பம் மற்றும் பெயர் பலகையை எங்களிடம் தெரிவிக்காமல் நெடுஞ்சாலை துறையினர் அகற்றலாம் என்ற அரசாணை உள்ளதா, எதன் அடிப்படையில் எங்களின் கொடிக்கம்பம் மற்றும் பெயர் பலகை அகற்றினார்கள். இதற்கு உரிய பதில் கூற வேண்டும் புதிய கொடி கம்பங்கள்மற்றும்பெயர் பலகையை வாங்கி தர வேண்டும் என்று வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து கிராமிய காவல் ஆய்வாளர் கார்த்திகா அகற்றிய சங்கத்தின் பெயர் பலகை புதிதாக வாங்கி தர அதிகாரிகளிடம் சமரசம் செய்தனர். அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலை துறை இளநிலை பொறியாளர் வரதராஜன் சொந்த செலவில் புதிய பெயர் பலகை வாங்கி தருவதாக வாக்குறுதி அளித்தநிலையில் அனைவரும் அங்கிருந்து கிளம்பி சென்றனர்.

## பஹல்காம் தாக்குதலை கண்டித்து ஈரோட்டில் எஸ்டிபிஐ கட்சி மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி கூட்டம்




காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் மனித நேயத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை கண்டித்து எஸ்டிபிஐ கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பில் ஈரோடு கருங்கல் பாளையம் காந்தி சிலை அருகில் மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி கூட்டம் மாவட்ட பொதுச்செயலாளர் அ.சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் க.முனாப் வரவேற்புரையாற்றினார்.

எஸ்டிபிஐ கட்சியின் கோவை மண்டல செயலாளர் ப.முகமது லுக்மானுல் ஹக்கீம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்டிபிஐ நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.முஹமது ஹசன் அலி நன்றியுரையாற்றினார்.

## புதுச்சேரி என் ஆர் காங்கிரஸ் நூர்ஜகான் பொதுச் செயலாளர் செந்தில்குமாரிடம் வாழ்த்து பெற்றார்



அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவரும், முதலமைச்சருமான என்.ரங்கசாமி அவர்கள் ஒப்புதலுடன் மாநில செயலாளர், முன்னாள் எம்எல்ஏ, என்.எஸ். ஜே. ஜெயபால் வழிகாட்டுதல்படி மாநில மகளிரணி செயலாளராக காமராஜ் நகர் தொகுதியை சேர்ந்த நூர் ஜஹான் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, மாநில மகளிர் அணி செயலாளர் நூர்ஜஹான், காமராஜ் நகர் தொகுதி பொதுச்செயலாளர் ஆர். செந்தில் குமாரை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார். அருகில் காமராஜ் நகர் தொகுதி என் ஆர். காங்கிரஸ் தலைவர் தனிகை வேல் மற்றும் என் ஆர் காங்கிரஸ் பிரமுகர் சங்கர் உள்ளனர்

## திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், 2025, 2026ஆம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு



சென்னை

தமிழ்நாடு அரசு எம். ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தமிழ்நாடு டாக்டர்ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது

தமிழ்நாடு அரசு எம். ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரே கல்வி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் திரைப்படத்துறை மற்றும் தொலைக்காட்சி துறையில் மிகச்சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும்,இயக்குனர்களையும் உருவாக்கி வரும் தனித்துவம்மிக்கநிறுவனமாகும்.

இந்தியாவிலேயே முதன் முறையாக திரைப்பட தொழில்நுட்பங்களுக்கென 20162017ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்று இளங்கலை காட்சிக் கலை (Bachelor of Visual Arts) எனும் நான்கு ஆண்டு கால பட்டப்படிப்புகளை பயிற்றுவித்து வரும் தமிழ்நாடு அரசு எம். ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், 2025 2026ஆம் கல்வி ஆண்டில் கீழ்க்கண்ட பிரிவுகளில் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கு இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இளங்கலை காட்சிக் கலை ஒளிப்பதிவு, எண்மிய இடைநிலை, ஒலிப் பதிவு, இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், படத்தொகுப்பு, உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன். எனவே, கலை ஆர்வம் உள்ள அனைத்து மாணவ/மாணவியரும் மேற்குறிப்பிடப்பட்ட பாடப்பிரிவுகளில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதற்கட்டமாக 28.04.2025 முதல் www.filminstitute.tn.gov.in எனும் இணையதளத்தில், மாணவர் சேர்க்கைக்கான படிவத்தினை, பயனாளர் கையேட்டின்(User Manual) அறிவுறுத்தலின்படி பூர்த்தி செய்து, விண்ணப்ப கட்டணத்தினை செலுத்தி பதிவு செய்தும், இரண்டாம் கட்டமாக அனைத்து உரிய ஆவணங்களையும் 28.05.2025 மாலை 05.00 மணிக்குள் பதிவேற்றம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

## என்எல்சி தொழிற்சங்க அங்கீகார தேர்தல் தொழிலாளர்கள் ஆர்வமுடன் வாக்களிப்பு

நெய்வேலி, ஏப்.26

என்எல்சி தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் ரகசிய வாக்கெடுப்பு இன்று காலை துவங்கியது.கடலூர் மாவட்டம் நெய்வேலி என்எல்சி இந்திய நிறுவனம் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகிறது. என்எல்சி இந்தியா நிறுவனத்தின் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான ரகசிய வாக்கெடுப்பு இன்று நடைபெறும் என மத்திய தொழிலாளர் நல துணை முதன்மை ஆணையர் சவுத்ரி அறிவித்திருந்தார்.

அதன்படி, இன்று காலை என்எல்சி இந்தியா நிறுவனத்தின் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான ரகசிய வாக்கெடுப்பு துவங்கியது.

என்எல்சியில் மொத்தமுள்ள 6,800 தொழிலாளர்கள் வாக்களிக்கும் இந்தத் தேர்தலில் 6 தொழிற் சங்கங்கள் போட்டியிடுகின்றன. கடந்த16ம்தேதிதொமுச, பாட்டாளி தொழிற்சங்கம், அதிமுக தொழிற்சங்கம், சிஐடியு, திராவிட தொழிலாளர்தொழிற்சங்கம், பாரதிய மஸ்தூர் சங்கம் உள்ளிட்ட தொழிற் சங்கங்கள் வேட்புமனு தாக்கல் செய்தன. அதைத்தொடர்ந்து தொழிற்சங்க நிர்வாகிகள், என்எல்சி நிலக்கரி சுரங்கங்கள் அனல் மின் நிலையங்கள் நகரப் பகுதி போன்ற இடங்களில் தொழிலாளர்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

தற்பொழுது முதன்மை சங்கமாக உள்ள தொமுசவுக்கு தொழிலாளர் விடுதலை முன்னணி, ஐஎன்டியுசி, மூவேந்தர் முன்னேற்ற தொழிற்சங்கம், தமிழக வாழ்வுரிமைச் சங்கம், மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உள்ளிட்டவை ஆதரவு அளிக்கின்றன. இந்நிலையில் இன்று காலை முதல் ஷிப்ட் துவங்கும் 6 மணியிலிருந்தே என்எல்சியில் உள்ள 11 இடங்களில் தொழிலாளர்கள் வாக்கு செலுத்தி வருகின்றனர்.

இன்று மாலை 5 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும்.இதனை தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு என்எல்சி ரகசிய வாக்கெடுப்பு தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம் யார் என்பது இன்று இரவு தெரியவரும்.

## பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை



பொள்ளாச்சி, ஏப்.26

பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக சுற்றுவட்டாரம் மற்றும் தமிழககேரள எல்லை பகுதியில் வசிக்கும் ஏராளமான மக்கள் வருகின்றனர். அதன்படி தற்போது பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரியில் 462 உள்நோயாளிகளும், தினமும் 1,500 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கிடையே அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் நோயாளிகள் கடும் அவதிப்படுகின்றனர். மேலும் திடீர் மின்தடையின் காரணமாக வயர்களில் தீப்பிடிப்பது போன்ற சம்பவங்களும் தொடர்ந்து நடக்கிறது.

அத்துடன் சி.டி. ஸ்கேன், எக்ஸ்ரே போன்ற உபகரணங்களும் பழுதாகி விடுகிறது. இதன் காரணமாக உரிய சிகிச்சை அளிக்க முடியாததால் நோயாளிகள் கடும் அவதிப்படுகின்றனர்.

இதனால் பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு முடிவு செய்து கடந்த 3 ஆண்டுக்கு முன்பு அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. அதன்படி ரூ.2.9 கோடி செலவில் புதிதாக ஜெனரேட்டர், உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வந்தன.

ஆனால் கூடுதல் நிதி தேவைப்பட்டதால் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுவிட்டன. இதையடுத்து கூடுதல் நிதியாக ரூ.33½ லட்சம் ஒதுக்கீடு செய்து 2 மாதங்கள் ஆகியும் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் இடம் புதர் மண்டி காணப்பட்டது.

இதனால் சமூக ஆர்வலர்கள் அதிருப்தி தெரிவித்தனர். இதுகுறித்து தினத்தந்தி நாளிதழில் கடந்த 18ந்தேதி படத்துடன் செய்தி வெளியானது.

இந்தநிலையில் இதன் எதிரொலியாக அதிகாரிகளின் உத்தரவின்பேரில் புதர்களை அகற்றி உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் பணிகள் மீண்டும் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க கூடுதலாகநிதி ஒதுக்கியும் உயர் அழுத்த மின்பாதை, மின்மாற்றி அமைக்கும் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டு தாமதமாகி வந்தது. இதையடுத்து தற்போது பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.

செய்தி வெளியிட்ட தினத்தந்தி நாளிதழுக்கும், இதற்கு நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், நன்றி தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்த பணிகளை விரைந்து முடித்து பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு தடையில்லா மின்சாரம்வழங்கஅதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## சென்னையில் 16 வயது சிறுமிக்கு அரிவாள் வெட்டு




சென்னை, ஏப்.26

சென்னை கொருக்குப்பேட்டையைச் சேர்ந்தவர் மதன்குமார். இவர் கடந்த 16ம் தேதி அப்பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது தொடர்பாக சிறுமி அளித்த புகாரின் பேரில் மதன்குமார் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்த போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில், தம்பி மீது புகார் அளித்ததால் ஆத்திரத்தில் இருந்த அவரது அண்ணன் பாபு அந்த சிறுமியை பின்தொடர்ந்து சென்று அரிவாளால் சரமாரியாக வெட்டினார். இதில் சிறுமிக்கு பல இடங்களில் அரிவாள் வெட்டு விழுந்தது. சம்பவ இடத்திலேயே சிறுமி நிலைகுலைந்து சரிந்து விழுந்தாள். இதனையடுத்து வெறிச்செயலில் ஈடுபட்ட பாபு அங்கிருந்து தப்பி ஓடினார்.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் சிறுமியை மீட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய பாபுவை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

## திருச்சி விமான நிலையத்தில் ரூ.10 கோடி மதிப்பிலான கஞ்சா பறிமுதல்



திருச்சி, ஏப்.26

திருச்சி விமான நிலையத்திற்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் பாங்காக்கில் இருந்து கொழும்பு வழியாக திருச்சிக்கு வந்திறங்கிய பயணிகளிடம் விமானநிலைய அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது ஒரு பயணியின் உடைமைகளை சோதனை செய்த போது, அதில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பிலான 9 கிலோ கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள், கஞ்சாவை கடத்தி வந்த பயணியை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஈரோடு ஒடிசா வாராந்திர சிறப்பு ரெயில் சேவை நீட்டிப்பு



ஈரோடு, ஏப்.26

பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரெயில் சேவைகளை ரெயில்வே நீட்டித்துள்ளது.

ஒடிசா சம்பல்பூர்ஈரோடு செல்லும் சிறப்பு ரெயில் சேவை ஜூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என ரெயில்வே தெரிவித்துள்ளது.

அதன்படி, சம்பல்பூரில் இருந்து ஈரோட்டிற்கு செல்லும் வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்: 08311) வருகிற மே மாதத்தில் 07, 14, 21, 28, ஜூன் மாதத்தில் 04, 11, 18, மற்றும் 25 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். இந்த ரெயில் சம்பல்பூரில் இருந்து (புதன் கிழமை) காலை 11.35 மணியளவில்புறப்படும்.

மறுமார்க்கத்தில், ஈரோட்டில் இருந்து சம்பல்பூருக்கு செல்லும் வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்: 08312) வருகிற மே மாதத்தில் 09, 16, 23, 30, ஜூன் மாதத்தில் 6, 13, 20, மற்றும் 27 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். இந்த ரெயில் ஈரோட்டில் இருந்து (வெள்ளிக்கிழமை) மதியம் 2.45 மணியளவில் புறப்படும்.

## எடப்பாடி பழனிசாமி மீதான அவதூறு வழக்கு ரத்து



சென்னை, ஏப்.26

நாடாளுமன்றத் தேர்தலின்போது, மத்திய சென்னையில் பிரசாரம் செய்த அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக தயாநிதிமாறன் எம்.பி., செலவிடவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதற்கு கடும் எதிப்பு தெரிவித்த தயாநிதி மாறன், தன்னை பற்றி தொகுதியில் அவதூறு கருத்துக்களை தெரிவித்ததற்காக எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறு வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நிலுவையில் இருந்தது. இந்த வழக்கை ரத்து செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

இதுதொடர்பான மனுவில், ஏற்கனவே செய்தித்தாள்களில் வெளியான செய்தியின் அடிப்படையில் பேசியதாகவும், தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசும் பேச்சுக்கள் அவதூறாகாது என்பதால், தனக்கு எதிரானவழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரி இருந்தார்.

இந்நிலையில் இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார். விரிவான உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் என்றும் அவர் தனது தெரிவித்தார்.

## பிளஸ்1 பொதுத்தேர்வு: கணினி அறிவியல் மாணவர்களுக்கு கருணை மதிப்பெண்



சென்னை, ஏப்.26

பிளஸ்2 பொதுத் தேர்வு நிறைவு பெற்றதை தொடர்ந்து பிளஸ்1 வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த மாதம் 27ந் தேதியுடன் நிறைவு பெற்றது. இறுதி நாள் அன்று வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கான தேர்வு நடந்தது. இதில் உயர்கல்விக்கான முக்கிய பிரிவுகளில் சேருவதற்கு முக்கிய பாடமாக பார்க்கப்படக் கூடிய வேதியியல் வினாத்தாள் சற்று கடினமாக இருந்ததாகவே தேர்வை எழுதிய மாணவமாணவிகள் கருத்து தெரிவித்தனர்.

ஒரு மதிப்பெண் வினாக்களில் 12 வினாக்கள் பாடப்பகுதியின் பின் புறத்திலும், 3 வினாக்கள் பாடப்பகுதிக்குள் இருந்தும் கேட்கப்பட்டு இருந்ததாக கூறிய அவர்கள், 2 மதிப்பெண் வினாக்களை தவிர, 3 மற்றும் 5 மதிப்பெண் வினாக்கள் கடினமாக கேட்கப்பட்டு இருந்ததாகவும் தெரிவித்தனர். பிளஸ்2, பிளஸ்1 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு மாணவமாணவிகளுக்கான பொதுத் தேர்வு நிறைவு பெற்று, விடைத்தாள் திருத்தும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், பிளஸ்1 வகுப்பு கணினி அறிவியல் தேர்வில் 24வது கேள்வியை எழுதியிருந்தாலே 2 மதிப்பெண்கள் வழங்கப்படும் என தேர்வுத்துறை அறிவித்துள்ளது. கேள்வி தவறாக கேட்கப்பட்டதால் கருணை மதிப்பெண் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.


மே 19ம் தேதி பிளஸ்1 தேர்வு முடிவுகள் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253



## ஆன்லைன் மோசடியில் ரூ. 2 லட்சத்தை இழந்த கல்லூரி மாணவர்: அதிர்ச்சி சம்பவம்



நீலகிரி, ஏப்.26

புதுக்கோட்டைமாவட்டத்தை சேர்ந்த 20 வயது வாலிபர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து வருகிறார். கல்லூரி விடுதியில் தங்கி பயின்றுவரும் அந்த மாணவர் படிக்கும் போதே தொழிலில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்க எண்ணியுள்ளார். இதற்காக ஆன்லைனில் தொழில், வருமான வாய்ப்புகள் உள்ளதான என பார்த்துள்ளார்.

இதுதொடர்பாக இன்ஸ்டாகிராமில் விளம்பரம் வந்துள்ளது. அதில், பணத்தை முதலீடு செய்தால் இருமடங்குலாபம்கிடைக்கும் என கூறப்பட்டிருந்தது. இதை நம்பிய மாணவர் ஆன்லைன் செயலி மூலம் பணத்தை சிறுதி சிறிதாக ரூ. 2 லட்சம் வரை முதலீடு செய்துள்ளார்.

இதையடுத்து, முதலீடு செய்த ஆன்லைன் நிறுவனத்திடம் பணத்தை திரும்பி தரும்படி மாணவன் கேட்டுள்ளார். ஆனால், பல்வேறு காரணங்களை கூறி முதலீட்டு தொகையை அந்நிறுவனம் திருப்பி செலுத்தவில்லை. இதனால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மாணவன் கடந்த 2 நாட்களாக கல்லூரி விடுதி அறையிலேயே இருந்துள்ளார்.

பின்னர், நண்பர்களிடன் கடனாக வாங்கிய பணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்பதாலும் தான் ஏமாற்றப்பட்டதாலும் விரக்தி அடைந்த அந்த மாணவன் நேற்று விஷம் குடித்து தற்கொலை முயன்றுள்ளார். இதை கண்ட விடுதியில் இருந்த சக மாணவர்கள் அவரை மீட்டு ஊட்டி மருத்துவமனையில் அனுமதித்தனர். தற்போது மேல் சிகிச்சைக்காக மாணவன் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நீலகிரி: வரையாடுகள் கணக்கெடுப்பின்போது மயங்கி விழுந்த வனக்காப்பாளர் உயிரிழப்பு



நீலகிரி, ஏப்.26

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனப்பகுதியில் வரையாடுகள் கணக்கெடுக்கும்பணி நேற்று தொடங்கியது. இதில், மலை முகடுகள், புல்வெளிகள் மலைகள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய வரையாடு வாழ்விடங்களுக்கு சென்று அதிகாரிகள் வரையாடுகள் கணக்கெடுப்பு பணியை மேற்கொண்டனர்.

இந்த பணியின்போது வனக்காப்பாளர் மணிகண்டன் என்பவரும் வரையாடு கணக்கெடுப்பில் ஈடுபட்டார். வனப்பகுதியில் நேற்று மாலை பணியில் இருந்தபோது மணிகண்டன் மயங்கி விழுந்தார். இதையடுத்து அவரை மீட்ட சக ஊழியர்கள் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். ஆனால், அவர் உயிரிழந்தார். இதையடுத்து, அவரது உடல் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சாலையில் கிடந்த பையில் ரூ. 2 லட்சம்: போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த கட்டிட தொழிலாளிக்கு பாராட்டுக்கள்



சென்னை, ஏப்.26

சென்னை நங்கநல்லூரை சேர்ந்த கட்டிட தொழிலாளி உமாபாரதி. இவர் நேற்று அப்பகுதியில் உள்ள சாலையில் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது, சாலையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் பை கிடந்தது. அந்த பையை உமாபாரதி எடுத்து பார்த்தார். அதில் ரூ. 2 லட்சம் பணம் இருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த உமாபாரதி பணப்பையுடன் அருகில் உள்ள போலீஸ் நிலையத்திற்கு சென்றார்.

பணப்பையை போலீசாரிடம் ஒப்படைத்தார். இதையடுத்து, பணப்பையில் இருந்த செல்போன் எண்ணை தொடர்பு கொண்ட போலீசார், பணத்தை உரியவரிடம் பத்திரமாக ஒப்படைத்தனர்.

மேலும், சாலையில் பையில் கிடந்த ரூ. 2 லட்சம் பணத்தை போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த கட்டிட தொழிலாளி உமாபாரதிக்கு போலீசார்சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.

## திண்டுக்கல்: போக்சோ வழக்கு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை




திண்டுக்கல் ஏப்.26

திண்டுக்கல் ஊரக அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2024ம் ஆண்டு 11 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் சிறுமலைபுதூர் பகுதியைச் சேர்ந்த தாமஸ் பெர்னான்டோ (வயது 28) என்பவரை திண்டுக்கல் ஊரக அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட எஸ்.பி. பிரதீப் அறிவுறுத்தலின்படி திண்டுக்கல் ஊரக அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் முருகேஸ்வரி, நீதிமன்ற ஏட்டு விஜயலட்சுமி மற்றும் அரசு வழக்கறிஞர் மைதிலி ஆகியோரின் முயற்சியால் நேற்று (24.04.2025) திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி, குற்றவாளி தாமஸ் பெர்னாண்டோவுக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 6 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1 லட்சத்து 12 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் இந்தாண்டு இதுவரை திண்டுக்கல் மாவட்டத்தில் 19 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு: ஓடும் ரெயிலில் இருந்து தவறி விழுந்த தொழிலாளி பலி



ஈரோடு, ஏப்.26

ஈரோடு மாவட்டம் மகுடஞ்சாவடி ரெயில் நிலையத்துக்கும், வீரபாண்டி ரெயில் நிலையத்துக்கும் இடைப்பட்ட தண்டவாள பகுதியில் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் இறந்து கிடப்பதாக ஈரோடு ரெயில்வே போலீசாருக்கு நேற்று முன்தினம் தகவல் வந்தது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று, இறந்து கிடந்தவரின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் விசாரணையில் இறந்தவர், கள்ளக்குறிச்சி மாவட்டம் ஏமாப்பூரை சேர்ந்த டைல்ஸ் ஒட்டும் தொழிலாளி வெங்கடேசன் (வயது 50) என்பதும், ரெயிலில் பயணம் செய்தபோது, படிக்கட்டில் இருந்து தவறி கீழே விழுந்து இறந்ததும் தெரியவந்தது. இதுகுறித்து ஈரோடு ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை: சிறுமிக்கு காதல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது



மதுரை, ஏப்.26

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே கீழ்நாச்சிக்குளம் பகுதியை சேர்ந்தவர் நாகன்(வயது 21). இவர் 8ம் வகுப்பு படிக்கும் 13 வயது சிறுமியிடம் காதலிக்குமாறு தொல்லை கொடுத்து வந்ததாக தெரிகிறது. இது குறித்து சிறுமி, தனது பாட்டியிடம் தெரிவித்தார்.

இதனை அறிந்த பாட்டி, சமயநல்லூர் மகளிர் போலீசில் புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் போலீசார் போக்சோ வழக்கு பதிவு செய்து நாகனை கைது செய்தனர்.

## தமிழகத்தில் தங்கி இருக்கும் பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம் குடியுரிமை அதிகாரிகள் நடவடிக்கை

சென்னை, ஏப்.26

காஷ்மீரில்நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தானுடனான அனைத்து உறவையும் இந்தியா துண்டித்துள்ளது. இந்தியாவில் வசிக்கும் பாகிஸ்தானியர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் தங்கி இருக்கும் பாகிஸ்தானியர்களை வெளியேற்றும் பணி தொடங்கி உள்ளது. தமிழ்நாட்டை விட்டு வெளியேற பாகிஸ்தானியர்கள்

யாரேனும் மறுத்தால் போலீஸ் உதவியுடன் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குடியுமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் எத்தனை பாகிஸ்தானியர்கள் தங்கி உள்ளனர் என்ற விவரத்தை குடியுரிமை அதிகாரிகள் வெளியிடவில்லை.

## ஏ.ஆர்.ரகுமான் ரூ.2 கோடி செலுத்த டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவு

இந்தியத் திரைப்பட உலகில் புகழ்பெற்ற இசையமைப்பாளராக இருப்பவர் ஏ.ஆர்.ரகுமான். இவர் மணிரத்தினம் இயக்கத்தில் 1992ம் ஆண்டு வெளிவந்த 'ரோஜா' திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானார். தற்போது இந்திய சினிமாவை தாண்டி உலக அளவில் கவனிக்கப்படும் இசையமைப்பாளராக வலம் வருகிறார். இவரின் இசையில் இந்தாண்டு காதலிக்க நேரமில்லை, சாவா படங்கள் வெளியாகி கவனம் பெற்றன. கடந்தாண்டு மனைவியுடனான விவகாரத்தை அறிவித்த ஏ.ஆர்.ரகுமான் தற்போது திரைப்படங்களில் பிஸியாக இருக்கிறார். தற்போது, ஏ.ஆர்.ரகுமான் இசையில் 10க்கும் மேற்பட்ட படங்கள் ரிலீஸிற்கு தயாராகி வருகின்றன.

பாடகர் பயாஸ் வாசிபுதீன் தாகர், ஏ.ஆர். ரகுமான் மற்றும் பொன்னியின் செல்வன் 2 படக்குழுவினருக்கு எதிராக டெல்லி உயர் நீதிமன்றத்தில் பதிப்புரிமை மீறல் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில், ரகுமான் "வீர ராஜா வீரா" பாடலில், தாகரின் தாத்தா மற்றும் தந்தை பாடிய "சிவ ஸ்துதி" பாடலின் சில பகுதிகளைப் பயன்படுத்தியதாக தாகர் குற்றம்சாட்டியிருந்தார். இதுதொடர்பான வழக்கில் "சிவ ஸ்துதி" பாடல்கள் மூலம் ஈர்க்கப்பட்டு அதை தழுவி வீரா ராஜா வீரா பாடலை உருவாக்கியதாக ஏ.ஆர்.ரகுமானே கோர்ட்டில் தகவல் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் 'பொன்னியின் செல்வன்' படத்தில் இடம்பெற்ற 'வீர ராஜா வீரா' பாடல் தொடர்பான காப்புரிமை வழக்கில், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் ரூ. 2 கோடியை நீதிமன்ற பதிவாளரிடம் செலுத்தவும், மனுதாரருக்கு ரூ.2 லட்சம் வழங்கவும் டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொன்னியின் செல்வன் நாவலை தழுவி மணிரத்னம் இயக்கத்தில் பொன்னியின் செல்வன் படம் இரண்டு பாகங்களாக வெளிவந்தது. விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, ஐஸ்வர்யா ராய், திரிஷா உள்ளிட்ட நட்சத்திரங்கள் நடித்திருந்தனர். ஏஆர் ரகுமான் இசையமைத்து இருந்தார்.

## இந்தியாவில் முன்கூட்டியே வெளியாகும் டாம் குரூஸின் மிஷன் இம்பாசிபிள் 8




ஹாலிவுட் ரசிகர்களை பெரிதும் கவர்ந்த ஆக்சன் படங்களின் பட்டியலில் 'மிஷன்: இம்பாசிபிள்' படங்களுக்கு கண்டிப்பாக இடம் இருக்கும். ஆக்சன் ரசிகர்களை ஆச்சரியப்பட வைக்கும் இந்தப் படத்தின் முந்தைய பாகங்கள் ஹாலிவுட்டில் வெளியாகி வசூல் சாதனை படைத்துள்ளன.

புகழ்பெற்ற மிஷன் இம்பாசிபிள் படத்தில் வரும் டாம் குரூஸின் கேரக்டர்தான் ஈதன் ஹண்ட். ஈதன் ஹண்ட் இந்த கேரக்டரை ஹாலிவுட் தாண்டி உலக ரசிகர்கள் யாரும் மறக்கமாட்டார்கள். சீக்ரட் ஏஜண்டாக டாம் குரூஸ் நடித்து 1996ம் ஆண்டு முதன் முதலில் மிஷன் இம்பாஸிபிள் படம் வெளியானது. முதல்பாகம் பெரிய அளவில் வெற்றி பெற்றதை தொடர்ந்து அடுத்தடுத்ததாக 7பாகங்கள் வெளியானது. இவை அனைத்துமே நல்ல வரவேற்பை பெற்றன.

கடந்த 2023ம் ஆண்டு ஜூலை இந்த சீரிஸின் 7 பாகம் வெளியானது. அதில் 'ஏஐ தொழில்நுட்பம்' மையமாக வைத்து முந்தைய பாகம் உருவாக்கப்பட்டது. முந்தைய பாகத்தை இயக்கிய கிறிஸ்டோபர் மெக்யூரி இந்தப் பாகத்தையும் இயக்கி இருந்தார். இந்த பாகத்தில் டாம் எந்த வித டூப் இல்லாமல் மலையில் இருந்து கீழே குதித்த காட்சி இணையத்தில் மிகப்பெரிய வைரலானது. சமீபத்தில் 8ம் பாகத்திற்கான டிரெய்லரை படக்குழு வெளியிட்டது.

இப்படம் மே 23ம் தேதி வெளியாக இருந்தது. ஆனால் தற்பொழுது இந்தியாவில் ஒரு வாரம் முன்பாகவே வரும் மே 17ம் தேதி திரைப்படம் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

## நானியின் ஹிட் 3 3வது பாடல் வெளியானது




தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. 'சூர்யாவின் சனிக்கிழமை' படத்தை தொடர்ந்து நானி, 'ஹிட் 3' படத்தில் நடித்து வருகிறார். கே.ஜி.எப் நடிகை ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தை பிரபல இயக்குனர் சைலேஷ் கொலானு இயக்குகிறார்.

ரத்தம் தெறிக்கும் கிரிமினல் ஜானரில் உருவாகியுள்ள ஹிட் 3 படத்தில்நானிபோலீஸ்கதாபாத்திரத்தில்நடித்துள்ளார். இப்படத்தின் முதல் இரண்டு பாகங்கள் பெரிய ஹிட் அடித்ததைத் தொடர்ந்து மூன்றாம்பாகம்தயாராகிவருகிறது. பிரசாந்திதிபிர்னேனிதயாரிப்பில் உருவாகும் இப்படம் வருகிற மே மாதம் 1ம் தேதி திரைக்கு வருகிறது.

ஏற்கனவே இப்படத்தின் முதல் பாடலான 'காதல் வெல்லுமா' வெளியாகி வைரலானது. இப்படத்தின் 2வது பாடலான 'அப்கி பார்அர்ஜுன்சர்க்கார்' பாடல் வெளியாகி வைரலாகி வருகிறது. இப்பாடல் 2 மில்லியன் பார்வைகளை கடந்துள்ளது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது. திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் வெளியாகிறது.

இந்நிலையில், 'ஹிட் 3' படத்தின் தாணு என்ற 3வது பாடல் வெளியாகியுள்ளது. இப்பாடலை இசையமைப்பாளர் அனிருத் பாடியுள்ளார்.

## ராஜஸ்தானுக்கு எதிரான வெற்றி.... விராட் கோலி கூறியது என்ன..?



ஐ.பி.எல். தொடரில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 205 ரன்கள் குவித்தது. பெங்களூரு தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 70 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து 206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ராஜஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 194 ரன்கள் மட்டுமே எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் துருவ் ஜுரெல் 47 ரன் எடுத்தார். பெங்களூரு தரப்பில் ஹேசில்வுட் 4 விக்கெட்டும், க்ருனால் பாண்ட்யா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இந்நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் பெங்களூரு வீரர் விராட் கோலி அளித்த பேட்டியில் கூறியதாவது,

எங்களுக்கு டாஸ் வெல்வதுதான் மிகவும் சவாலான காரியமாக இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து மூன்று ஆட்டங்கள் எங்கள் சொந்த மைதானத்தில் தோல்வி கண்டோம். பேட்டிங் செய்வதில் நாங்கள் இன்னும் சிறப்பாக என்ன செய்யலாம் என்று விவாதித்தோம். நாங்கள் பேட்டிங் செய்யும் போது ஆடுகளம் சிறப்பாக இல்லை.

ராஜஸ்தான் பேட்டிங் செய்யும்பொழுது பனிப்பொழிவு வந்து ஆடுகளத்தை சிறப்பாக மாற்றியது. இப்போது எங்களுடைய திட்டம் எளிமையாக மாறிவிட்டது. எங்களுடைய ஒரு வீரர் தொடர்ந்து விளையாடுவார். மீதமுள்ளவர்கள் அவரைச் சுற்றி அதிரடியாக விளையாட வேண்டும் அவ்வளவுதான்.

சால்ட் அவருடைய பாணியில் விளையாடினார். எனக்கும், படிக்கலுக்கும் இந்த மைதானம் நல்ல முறையில் தெரியும். எனவே, நாங்கள் பந்தை டைமிங் செய்ய முடிவு செய்தோம். மேலும், பவுண்டரிகள் அடித்து எதிரணி மீது அழுத்தத்தை வைத்திருந்தோம். இவ்வாறு அவர் கூறினார்.

## டி20 கிரிக்கெட்டில் 4வது இந்திய வீரராக வரலாற்று சாதனை படைக்க உள்ள தோனி விவரம்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று நடைபெறும் 43வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதுகின்றன. 5 முறை சாம்பியனான சென்னை அணி நடப்பு தொடரில் வழக்கத்துக்கு மாறாக தடுமாறி கொண்டிருக்கிறது.

எஞ்சிய 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால்தான் சென்னை அணி 'பிளேஆப்' சுற்று வாய்ப்பில் நீடிக்க முடியும். இந்த இக்கட்டான சூழலில் சென்னை அணி இன்று ஐதராபாத்துடன் மோத உள்ளது. இந்நிலையில், இன்றைய ஆட்டத்தில் தோனி களம் இறங்குவதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் 4வது இந்திய வீரராக வரலாற்று சாதனை ஒன்றை படைக்க உள்ளார்.

அதாவது ஒட்டுமொத்த டி20 கிரிக்கெட் போட்டிகளில் 400 போட்டிகளை விளையாடும் 4வது இந்திய வீரர் என்ற சாதனை பட்டியலில் தோனி இணைய உள்ளார். இந்த பட்டியலில் இந்தியா தரப்பில் ரோகித் சர்மா (456 போட்டிகள்) முதல் இடத்திலும், தினேஷ் கார்த்திக் (412 போட்டிகள்) 2வது இடத்திலும், விராட் கோலி (408 போட்டிகள்) 3வது இடத்திலும் உள்ளனர்.

தோனி 399★ போட்டிகளுடன் 4வது இடத்தில் உள்ளார். ஒட்டுமொத்தமாக உலக அளவில் கைரன் பொல்லார்டு (695 போட்டிகள்), டுவைன் பிராவோ (582 போட்டிகள்), ஷோயப் மாலிக் (557 போட்டிகள்) முதல் 3 இடங்களில் உள்ளனர்.

## ஐ.பி.எல். 2025: சென்னை ஐதராபாத் போட்டியை குடும்பத்துடன் கண்டுகளிக்கும் அஜித்

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று நடைபெறும் 43வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதி வருகின்றன.

5 முறை சாம்பியனான சென்னை அணி நடப்பு தொடரில் வழக்கத்துக்கு மாறாக தடுமாறி கொண்டிருக்கிறது. தொடக்க ஆட்டத்தில் தனது சொந்த மண்ணில் மும்பையை வீழ்த்திய சென்னை அணி அதன் பிறகு தொடர்ச்சியாக 5 ஆட்டங்களில் (பெங்களூரு, ராஜஸ்தான், டெல்லி, பஞ்சாப், கொல்கத்தா அணிகளிடம்) தோல்வி கண்டது. 7வது ஆட்டத்தில் லக்னோவை தோற்கடித்து ஒருவழியாக வெற்றிப் பாதைக்கு திரும்பியது. ஆனால் அந்த உத்வேகத்தை நீடிக்க முடியாமல் கடந்த ஆட்டத்தில் 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பையிடம் பணிந்து புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. இந்நிலையில் இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலாவதாக பேட்டிங் செய்து வருகிறது. இந்நிலையில் சென்னையில் நடக்கும் இந்த போட்டியை பிரபல நடிகர் மற்றும் கார் ரேசருமான அஜித் குமார் அவருடைய மனைவி ஷாலினி மற்றும் அவரது மகன் ஆத்விக், மகள் அனுஷ்காவுடன் உடன் வந்து கண்டுகளித்து வருகிறார். மேலும்சிவகார்த்திகேயன்மற்றும்அவரதுகுடும்பத்தினரும் போட்டியை ரசித்து வருகின்றனர். இதுதொடர்பாக வீடியோவும், புகைப்படமும் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. சேப்பாக் மைதானத்தில் 'தல' தோனி மற்றும் அஜித் (ஏ.கே) இருவரையும் ஒரே இடத்தில் பார்த்து, ரசிகர்கள் ஆரவாரம் செய்து வருகின்றனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.